FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8167276

1. District : கடலூர் PS: உ.த.க. பிரிவு Year: 2025 FIR No.: 8/2025 Date 07.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம் The Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம் 1988 as amended by The Prevention Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம் Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from நாள் முதல் 06.10.2025 Date to : நாள் வரை 06.10.2025
குற்ற நிகழ்வு நாள்
Time Period : Time from நேரம் முதல் 18.00 hrs Time to : நேரம் வரை 23.30 hrs
நேர அளவு
(b) Information Received at PS. Date : 07.10.2025 Time : நேரம் 11.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
(c) General Diary Reference : Entry No(s) Vol - III Time : நேரம் 11.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

4. Type of Information : Written/ Oral : கணினி தட்டச்சு புகார் மனு
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 3 கி.மீ. தென்கிழக்கு.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், பீச் ரோடு, கடலூர்.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கோ.ராணி (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : ---- Place of Issue : ----
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address :
தொழில் ஆய்வுக்குழு அலுவலர் முகவரி ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி.D.உஷா, செயல் அலுவலர் (கணக்குகள்), பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர்,
2) திரு. R.வெங்கடேசன், தகவல் மேலாண்மை வல்லுநர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர்
3) திரு.P.பாஸ்கரன், செயல் அலுவலர், பெண்ணாடம் பேரூராட்சி, கடலூர் மாவட்டம்,
4) திரு.A.எழில்வாசன், பணி ஆய்வாளர், கிள்ளை பேரூராட்சி, கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது :</u>

நான் இன்று 07.10.2025 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி.கோ.ராணி, ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் கோ.ராணி, ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர். பெறுநர்

(தொடர்ச்சி பக்கம் –3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

07/10/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K.SHANTHI cuddalore
Rank: நிலை DSP, VACB No. எண் .....

காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/647/2025 நாள் : 07.10.2025_பொருள் : திடீர் ஆய்வு சோதனை – பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) ஆய்வுக்குழு அலுவலரான கோ.ராணி ஆகிய நான் 06.10.2025ந் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது, கடலூர் மாவட்டம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில், அலுவலகத்தின் ஊழியர்கள் கடந்த ஒரு வாரமாக கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கு அத்தியாவசிய பொருட்களுக்கான வினியோகஸ்தர்கள் (Suppliers) மற்றும் செயல் அலுவலர்களிடம் லஞ்சப்பணம் வசூலித்து அலுவலகத்தில் வைத்திருப்பதாக இரகசிய தகவல் எனக்கு கிடைத்தது, பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை சுமார் 17.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த துணை காவல் கண்காணிப்பாளர் திருமதி.K.சாந்தி அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி கடலூர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு சென்றால் அங்கு கடலூர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகத்தின் ஊழியர்கள் கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கு அத்தியாவசிய பொருட்களுக்கான வினியோகஸ்தர்கள் (Suppliers) மற்றும் செயல் அலுவலர்களிடம் லஞ்ச பணம் வசூலித்து வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், துணை காவல் கண்காணிப்பாளர் திருமதி.K.சாந்தி மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 17.45

மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கடலூர் வண்ணாரப்பாளைத்தில் உள்ள கிழக்கு மேற்காக செல்லும் பீச் ரோட்டிற்கு, தெற்கே அமைந்துள்ள வடக்கு பார்த்த வாசல் கொண்ட கடலூர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் கடலூர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 18.00 மணிக்கு வடக்கு பார்த்து அமைந்து இருக்கும் கடலூர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலக வளாகத்திற்கு சென்று அலுவலக இரும்பு கேட்டை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். இரும்பு கேட்டின் இடது புறம் உதவி இயக்குநர் அவர்கள் அறை என்று தெரிந்து கொண்டேன். அந்த அறையில் யாரும் இல்லை. பின்னர் அறையிலிருந்து வெளியில் வந்து அலுவலகத்தின் பிரதான வாயில் வழியாக உள்ளே சென்றோம். அங்கு வலது புறத்தில் ஒரு பெண்மணி நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரை பற்றி விசாரணை செய்ததில் அவர் தனது பெயர் உஷா, வயது 47, மேற்படி அலுவலகத்தில் செயல் அலுவலர் (கணக்குகள்)–ஆக பணிபுரிந்துவருவதாக தெரிவித்தார். அவரிடம் என்னையும், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். அவரிடம் நான் அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்ய இருக்கும் விவரத்தை தெரிவித்து அவரை சோதனை முடியும் வரை சோதனை குழுவினருடன் உடனிருக்க கேட்டுக்கொண்டேன். அவரும் சம்மதம் தெரிவித்து உடன் இருந்தார். பின்னர் நான் அவரது இருக்கையை சோதனை செய்தேன். அவரது மேஜையில் 2 டிராயர்கள் இருந்தது அதனை சோதனை செய்ததில் அதில் ஆவணங்கள் மற்றும் பேப்பர்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்து. மேலும் அவரை சோதனை செய்ததில் பணம் ரூ.420/– இருந்தது. அப்பணத்தை அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலக ஹாலுக்கு தென்மேற்கு பகுதியில் போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருந்த

பெண்மணி ஒருவரை விசாரிக்க அவர் தனது பெயர் மங்கலட்சுமி என்றும் தான் இவ்வலுவகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன் என்று தெரிவித்தார். அவரது கைப்பையை சோதனை செய்ய அவரிடம் ரூ.150/– இருந்தது. அப்பணத்தை அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு எதிரே அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவரது பெயர் பிரேம்குமார் என்றும், இளநிலை உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.400/– இருந்தது. மேற்படி அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. ஹாலில் நின்றிருந்த ஒரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ரஜினி என்றும், துப்புரவு பணியாளராக பணியாளரான தான் உதவி செயற்பொறியாளர் திரு.இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஒட்டுநராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.270/– இருந்தது. அப்பணத்தை அலுவலக பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. ஹாலிலிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஆனந்தராம் என்றும், தான் பில் கலெக்டராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.400/– இருந்தது. அப்பணத்தை அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி ஹாலுக்கு மேற்கில் உள்ள பொறியாளர் பிரிவு அறையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் R.கணேசன் என்றும், தான் கடலூர் உதவி செயற்பொறியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.730/– இருந்தது. மேற்படி அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு வலதுபுறத்தில் இருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் P.இராதாகிருஷ்ணன் என்றும், தான் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு உதவி

செயற்பொறியாளரர்க பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,490/– இருந்தது. மேற்படி அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறைக்கு வடக்கு திசையில் உள்ள ஒரு அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அ.எழில்வாசன் என்றும், தான் பணி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.800/– இருந்தது. அப்பணத்தை பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததாலும், மேற்படி பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு இல்லாததால் மேல்விசாரணைக்காக பணம் ரூ.800/–(500x1, 100x3) ஐ கைப்பற்றப்பட்டது. மேற்படி நபருக்கு இடது புறம் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவரது பெயர் V.விக்னேஷ் என்றும், தான் பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய ரூ.400/– இருந்தது. மேற்படி அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அலுவலக ஹாலுக்கு கிழக்கில் உள்ள கணினி அறைக்கு உள்ளே சென்ற போது வடக்கு திசை பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் பாஸ்கரன் என்றும், தான் பெண்ணாடம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ததில் ரூ.4,500/– இருந்தது. அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் ரூ.500/– என பதிவு செய்திருந்தார். மேற்படி ரூ.500/– அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டு, மீதி பணம் ரூ.4,000/– (500x8)க்கு சரியான முகாந்திரம் கூறாததால் லஞ்சப்பணமாக இருக்கும் என கருதி மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கணினிக்கு எதிரே போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணியை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் P.ஜெயசுதா என்றும், தான் Data Entry Operater–ஆக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவருக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் V.K.சரவணன் என்றும், தான் Data Entry Operater–ஆக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை

சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவருக்கு அருகில் போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் R.வெங்கடேசன் என்றும், தான் தகவல் மேலாண்மை வல்லுநர் (Management of Information System Specilist)–ஆக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.11,720/– இருந்தது. ஆனால் அலுவலக பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டில் ரூ.720/– மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி ரூ.720/– அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டு, மீதி பணம் ரூ.11,000/– (500x22)க்கு சரியான முகாந்திரம் கூறாததால் லஞ்சப்பணமாக இருக்கும் என கருதி மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் குழுவினர் மற்றும் செயல் அலுவலர் (கணக்குகள்) ஆகியோருடன் அலுவலகத்திற்கு வெளியில் மேற்கு புறத்தில் அமைந்துள்ள மாடிப்படி வழியாக முதல் தளத்திற்கு சென்ற போது வடக்கு பார்த்த வாசல் கொண்ட கூட்ட அரங்கம் இருந்தது. அதன் உள்ளே நுழைந்த போது மேற்கு நோக்கி 3 மேஜைகள் இருந்தது. அதில் நடுவில் இருந்த மேஜையில் உள்ள வலதுபுற நடு டிராயர் பூட்டிருந்தது. அந்த சாவியை செயல் அலுவலர் (கணக்குகள்) அவர்களிடம் கேட்ட போது அந்த சாவி தகவல் மேலாண்மை வல்லுநர் வெங்கடேசனிடம் உள்ளது என தெரிவித்தார். பின்னர் வெங்கடேசனை முதல் தளத்திற்கு வரவழைத்து அவரிடம் சாவியை வாங்கி திறந்து பார்த்த போது அதில் கட்டு கட்டாக பணம் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க 500x903=4,51,500, 200x463=92,600, 100x188=18,800, 50x3=150, 20x22=440, 10x67=670 ஆக மொத்தம் ரூ.5,64,160/– இருந்தது. மேற்கண்ட பணத்தை பற்றி திருமதி.உஷா, செயல் அலுவலர் (கணக்குகள்) அவர்களிடம் விசாரிக்க இந்த பணத்தை பற்றி தனக்கு ஏதும் தெரியாது என கூறினார். அருகில் இருந்த வெங்கடேசனை விசாரிக்க மேற்கண்ட பணம் கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கு அத்தியாவசிய பொருட்களுக்கான வினியோகஸ்தர்கள் (Suppliers) மற்றும் செயல் அலுவலர்கள் உதவி இயக்குநர் பேரூராட்சி கடலூர் அவர்களுக்கு கமிஷன் தொகையாக

கொடுத்த பணத்தை தான் வாங்கி வைத்திருந்தாக தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.5,64,160/– ஐ மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே டிராயரில் அடியில் இருந்த 3 காக்கி கவர்கள் ஒரு பக்கம் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு கவரில் Lalpet–20, K.M.Kovil–20, Sethiya–20, Pattampak–20=80 என பென்சிலில் எழுதப்பட்டடிருந்தது. மற்றொரு கவரில் Annamalai nagar, Gangikonda, Pennadam – 20,000x3=60,000 என பேனாவால் எழுதப்பட்டிருந்தது. மற்றொரு காக்கி கவரில் Srimush–2,08,405, K.M.Kovil–2,42,020=8,66,298 என எழுதப்பட்டிருந்தது. A4 வெள்ளை தாளில் Arakandanallur–Hasini–2,46,751 & 2,44,874 என ஒரு பக்கம் முழுவதும் குறிப்புகள் கருப்பு நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. மற்றொரு ஒரு வெள்ளை தாளில் K.M.Koil–Hasini Traders–2,47,787, Lalpet– Hasini Traders–2,49,714 என ஒரு பக்கம் முழுவதும் குறிப்புகள் நீல நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. மற்றொரு ஒரு வெள்ளை தாளில் Gingee – SI Traders–2,63,430, Gingee ஷண்முகா லைட்ஸ்– 1,23,850 என ஒரு பக்கம் முழுவதும் குறிப்புகள் பென்சிலில் எழுதப்பட்டிருந்தது. மேற்படி 3 வெள்ளை காகிதம் மற்றும் 3 காக்கி கவர்கள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மொத்த பணம் ரூ.5,79,960/– மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கண்டுபிடிக்கப்பட்ட பணம் ரூ.5,79,960/–ஐ யாரால் கொடுக்கப்பட்டது என்பதையும் மற்றும் பிற சந்தேக பணப் பரிமாற்றங்கள் ஏதேனும் இருந்துள்ளதா என்று குறித்துக் கண்டறிய கடலூர் உதவி இயக்குநர் பேரூராட்சி அலுவலகத்தில் இயங்கி வந்த CCTV–ன் HIKVISION என்ற பெயர் கொண்ட DVR விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஆய்வின் போது கடலூர் உதவி இயக்குநர் பேரூராட்சி அலுவலக செயல் அலுவலர் (கணக்குகள்) திருமதி.M.உஷா, பெண்ணடம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.பாஸ்கரன், பணி ஆய்வாளர் திரு.அ.எழில்வாசன் மற்றும் தகவல் மேலாண்மை வல்லுநர் திரு.வெங்கடேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த 1) பணியாளர்கள் வருகைப் பதிவேடு–2025,

2) பணியாளர்கள் கையிருப்பு பதிவேடு, 3) பொறியியல் பிரிவு – பணியாளர்களின் வருகை பதிவேடு–2025, 4) கணினி இயக்குபவர் வருகைப் பதிவேடு–2025 மற்றும் 5) PMAY–MIS வருகைப் பதிவேடு–2025 ஆகியவற்றை மேல்விசாரணைக்காக கைப்பபற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எந்தவித மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 18.00 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. 06.10.2025ந் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.5,79,960/–, (1) திருமதி.D.உஷா, செயல் அலுவலர் (கணக்குகள்), பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர், 2) திரு.P.பாஸ்கரன், செயல் அலுவலர், பெண்ணாடம் பேரூராட்சி, கடலூர் மாவட்டம், 3) திரு.A.எழில்வாசன், பணி ஆய்வாளர், கிள்ளை பேரூராட்சி, கடலூர் மாவட்டம். 4) திரு. R.வெங்கடேசன், தகவல் மேலாண்மை வல்லுநர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர் ஆகியோர்களது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், தடயப்பொருட்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 07.10.2025ந்தேதி காலை 11.30 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். எனவே (1) திருமதி.D.உஷா, செயல் அலுவலர் (கணக்குகள்), பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர், 2) திரு. R.வெங்கடேசன், தகவல் மேலாண்மை வல்லுநர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர் 3) திரு.P.பாஸ்கரன், செயல் அலுவலர், பெண்ணாடம் பேரூராட்சி, கடலூர்

மாவட்டம், 4) திரு.A.எழில்வாசன், பணி ஆய்வாளர், கிள்ளை பேரூராட்சி, கடலூர் மாவட்டம் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்.....) (கோ.ராணி), ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர்.

Submitted,

Received the above computer typed complaint on 07.10.2025 at about 11.30 hrs, hence I registered a case in Cuddalore V & AC Cr.No.8/2025, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 07.10.2025 at 12.30 hours. sd/- xxxx 07.10.2025 (K.SHANTHI), Deputy Superintendent of Police, V&AC, Cuddalore.

இதன் அசலை வாதியின் புகார்மனுவுடன் இனைத்து கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

07/10/2025

(K.SHANTHI),
Deputy Superintendent of Police,
V&AC, Cuddalore.